கொழும்பு மருத்துவ அத்தியட்சகராகிய டாக்டர் கின்சி அவர்கள் இலங்கையின் ஆளுநர் சேர் ஆதர் கோடன் அவர்களுக்கு கத்தோலிக்க அருட் சகோதரிகளை பயிற்சி தாதித்சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான முடிவில்லா உற்சாகத்துடன் இருப்பதாக உத்தியோகபூர்வமான அறிவித்தமையின் ஊடாக உறுதிப்படுத்தப்படுகின்றது. அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தாதியர் சேவைக்காக வருகை தருகின்றதான அருட் சகோதரிகளின் போக்குவரத்து செலவினங்கள், தங்குமிட வசதிகள், மாதாந்த வேதனம் மற்றும் தேவையான ஏனைய வசதிகளை முழுமையாக அரச அனுசரணையின் கீழ் பெற்றுத் தரப்படுமென உறுதிமொழி வழங்கப்பட்டதையடுத்து அவ் வேண்டுகோளை பரிசீலனைக்கு உட்படுத்திய அதி வணக்கத்துக்குரிய கிறிஸ்டோபர் பொனஜிட் *O.M.I*, கொழும்பு மேற்றாணியார் அவர்களும் அதி வணக்கத்துக்குரிய புவாசோ *O.M.I*, அருட்தந்தையும் அது சம்பந்தமாக திருப்தியடைந்தன் விளைவாக ஆறு பேரைக் கொண்ட பிரான்சிஸ்கான் அருட் சகோதரிகளைக் கொண்டதொரு குழுவொன்று பிரான்ஸ் நாட்டின் மாசெல்ஸ் நகரத்திலிருந்து இலங்கையை நோக்கி 1886 ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்து ஜுன் மாதம் 15ஆம் திகதி நாட்டுக்கு வந்தடைந்தனர். 1886 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22ம் திகதி அவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரி வளாகத்தில் இருந்த சிறியதொரு வீட்டினை தமது இருப்பிடமாக பயன்படுத்திக் கொண்டதுடன் அதி வணக்கத்துக்குரிய புவாசோ மற்றும் கௌரவ கொலின் அருட்தந்தையினால் வைத்தியசாலையின் அதிகாரிகளின் பங்களிப்புடன் அந்த இருப்பிடம் ஆசிர்வதிக்கப்பட்டதை அடுத்து இது தங்குமிட வசதியாக பயன்படுத்தப்பட்டது. கௌரவ கொலின் அருட்தந்தை மேற்படி அருட் சகோதரிகளின் முதலாவது குருவானவரான அருட் தந்தையாக நியமிக்கப்பட்டார். தங்களது சிறிய இருப்பிடத்தில் சிறியதொரு அறையில் தமது பலிபீடத்தை அமைத்துக் கொண்ட அருட் சகோதரிகளுடன் வணக்கத்துக்குரிய பெயில் அருட்தந்தை வைத்தியசாலை வளாகத்தில் முதலாவது நற்கருணை ஆராதனையை ஜுன் மாதம் 24ம் திகதி நடாத்தினார்

காலச்சக்கரம் அவ்வாறாக உருண்டோடும் போது முழுமையான அரச அனுசரணையுடன் வைத்தியசாலை வளாகத்தில் அருட்சகோதரிகள் தங்கியிருந்த இடத்திற்கு அண்மையிலேயே அமைக்கப்பட்ட தேவாலயம் 1887ஆம் ஏப்ரல் மாதம் 1ம் திகதி வணக்கத்துக்குரிய




கொக்கி *O.M.I*,அருட்தந்தையினால் ஆசீர்வதிக்கப்பட்டு முதலாவது நற்கருணை ஆராதனை நடாத்தப்பட்டது. 1888ம் ஆண்டில் வணக்கத்துக்குரிய கொன்ரட் அருட்தந்தை அருட்சகோதரிகளினதும் பெரியாஸ்பத்திரியினதும் தகைமை பெற்ற அருட் தந்தையாக நியமிக்கப்பட்டதுடன் அச்சந்தர்ப்பம் தொடக்கம் அருட் சகோதரிகளினதும் தாதியர் அருட் சகோதரிகளினதும் கத்தோலிக்க நோயாளிகளினதும் ஆன்மீக தேவைகளுக்காக அவர் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்.

மறைந்த விக்டோரியா மகாராணியின் பெயரில் கண் வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுவதற்கு இலங்கையின் ஆளுநர் சேர். ஜோசப் வெஸ் ரிஜ்வே அவர்களின் பாரியாரே முதலாவதாக கருத்தினை முன்வைத்தார். அதற்கேற்ப கண் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதியம் ஒன்றும் தாபிக்கப்பட்டது. இலங்கையின் தனவந்தராக இருந்த முகந்திரம் எம்.எஸ். பர்னாந்து அவர்கள் அதற்கு 5000 ரூபாய் அன்பளிப்பாக வழங்கினார். 1902ம் ஆண்டில் இப்பணி றிஜ்வே அவர்களின் பாரியாரினால் பத்திரிகைகளுக்கு அறிவிக்கப்பட்டது. பத்திரிகை வாயிலாகவும் பெருமளவு ஒத்துழைப்பு இதற்கு கிடைத்தது. மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே ஒரு லட்சம் ரூபாய் பொதுமக்களின் உதவியின் மூலம் இந் நிதியத்திற்கு கிடைத்தது. ஆரம்ப கால கட்டத்தில் கண் நோய்க்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக வைத்தியசாலை ஒன்றை நிறுவுவதற்கு நோக்கம் கொண்டு இது ஆரம்பிக்கப்பட்டாலும் பின்னர் ஏனைய நோய்களுக்காகவும் இவ்வைத்தியசாலையை பயன்படுத்திக் கொள்ளுமாறு வெஸ்ட் றிஜ்வே ஆளுநரினால் அறிவிக்கப்பட்டது. இக்கூற்றை அடுத்து பொதுமக்களின் நிதி உதவி பெருமளவு வந்து சேர்ந்தது. அதனை அடுத்து மருத்துவ மாணவர்களுக்கும் தமது கல்வி நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வகையில் தற்போதைய காணிப் பகுதி வைத்தியசாலைக்காக தெரிவு செய்யப்பட்டது.

1903ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி றிஜ்வே சீமாட்டியினால் வைத்தியசாலையை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. கொழும்பு நகர மண்டபத்திற்கு அருகாமையில் கண் வைத்தியசாலை சந்தியில் நீங்கள் காணுகின்ற மனங்கவரும் வகையிலான அழகிய கட்டடம் இதுவாகும். இக்கட்டடம் பிரித்தானிய ரோயல் கட்டட கலைஞர் சங்கத்தின் அங்கத்தவராகயிருந்த புகழ் பெற்ற கட்டிட கலைஞராகிய எட்வட் ஸ்கின்னர் அவர்களினால் வடிவமைக்கப்பட்டது. இது இந்து சமயத்தின் சம்பிரதாயங்களை உள்வாங்கிக் கொண்டதான ஒரு ஆக்கமாகவே காணக் கூடியதாக இருக்கின்றது. இதன் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஒரு லட்சத்து அறுபது ஆயிரம் ரூபா

செலவாகும் என அவரினால் மதிப்பீடு செய்யப்பட்டது. கட்டிடத்தின் முன் பகுதியின் நீளம் 200 அடியாகும். அதன் அகலம் 97 அடியாகும். இரண்டு சுவர்களுக்கிடையிலான இடைவெளி 38 அடியாகும். வறாந்தையின் உள்ளே வார்ட்டின் உயரம் 14 அடியாகும். ஆரம்ப காலக் கட்டத்தில் அதன் இடவசதிகள் காணப்படும் காப்பு பெட்டகங்கள் அக்காலத்தில் கொழும்பு மருத்துவ சபைக்குச் சொந்தமான வைத்தியசாலைகளின் அனைத்து நிதிசார் நடவடிக்கைகளின் போதும் பணத்தை பாதுகாப்பாக வைப்பதற்காக பயன்படுத்தப்பட்டதான காப்பு பெட்டகங்களாகும் (*Safe*) அமைக்கப்பட்டன. இங்கிலாந்து போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் புறம்பானதொரு விஞ்ஞான முறைமையின் கீழ் தேர்ச்சிப்பெற்ற தொழில்வாண்மை சார்ந்த ஆய்வுக்கூட சேவையொன்று பயன்படுத்தப்படுகின்றது. அதற்கேற்ப 1914 ஆம் ஆண்டில் இலங்கையின் முதலாவது ஆய்வுகூட




முதலாவது நிர்வாக கட்டிடத்தின் தோற்றம் (White House)

45 நோயாளிகளுக்கு மாத்திரமே போதியதாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையில் மின் விளக்குகள் பயன்படுத்தப்படவில்லையென்பதுடன், 1903 ஆம் ஆண்டு வாட்டுகளை ஒளியேற்றுவதற்காக வாயு விளக்குகள் பயன்படுத்தப்பட்டன. அக்காலக் கட்டம் வரை மின் விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. 1906 ஆம் ஆண்டு பெருந்தோட்ட பயிர்ச் செய்கையாளர்களின் வாட்டில் நான்கு கட்டில்களை கொண்ட அறையொன்று தபால் ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்டது. அது ஸ்கின்னர் ஞாபகார்த்த வாட்டு என்று அழைக்கப்பட்டது.

முதலாவது நிர்வாக கட்டிடம் 1904 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதுடன், அது தற்போது **ஷவைட் ஹவுஸ்ஷ** என அழைக்கப்படும், மிகவும் கம்பீரமாக காட்சியளிக்கும் கட்டிடமாகும். இங்கு 1904 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட வைத்தியசாலையின் மருத்துவர்களின் பிரதான உத்தியோகபூர்வ மனை பல முறை புதுப்பிக்கப்பட்டதையடுத்து 2014 ஆம் ஆண்டு தனது 100 ஆண்டுகளை பூர்த்தி செய்கின்றது.

1871 முதல் 1896 ஆம் ஆண்டு வரை இலங்கையின் தபால் மாஅதிபராகவும், தபால் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் பதவி வகித்த தோமஸ் எட்வர்ட் பான்ஸ் ஸ்கின்னர் அவர்களை ஞாபகமூட்டும் வகையில் ஸ்கின்னர் ஞாபகார்த்த வாரட்டு நிறுவப்பட்டது. அதற்கு அண்மையிலேயே ஞானசேகரம் வார்ட்டும் 1924 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்த இரண்டு வாரட்டுகளும் 16 ஆம் இலக்க வார்ட்டு என அழைக்கப்படுகின்றது. அதனையடுத்து 1943 ஆம் ஆண்டு மர்சன்ட் வார்ட்டுகளும் (கட்டணம் செலுத்தப்படவேண்டிய) தொழில் வாண்மையாளர் இலங்கை தேசிய வைத்தியசாலையில் நியமனம் பெற்றார். ஆயினும், மருத்துவ ஆராய்ச்சி ஆய்வுகூடம் வைத்தியசாலைக்கு புறம்பாக "டி சொய்ஸா நுண்ணுயிர் நிறுவகம்" என அழைக்கப்பட்ட நிறுவகத்தில் நிறுவப்பட்டது. மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து பயிற்சிப் பெற்ற மருத்துவ ஆராய்ச்சி தொழில்நுட்ப விசேட உத்தியோகத்தர்கள் 50 பேரளவில் வைத்தியசாலையின் சேவைக்காக நியமிக்கப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய வைத்தியசாலைகளில் விசேட நிபுணர்களுக்கான தேவைகளுக்கேற்ப சில ஆய்வுக்கூட வலயங்கள் உருவாக்கப்பட்டன. 20 ஆம் தசாப்தம் வரை அவ்வாறான ஆய்வுக் கூடங்கள் வழியாக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

20 ஆம் தசாப்தத்தின் இறுதி காலப் பகுதியில் வெவ்வேறாக செயற்படும் 5 ஆய்வுக்கூடங்கள் தேசிய வைத்தியசாலைக்கு சேவைகளை வழங்கின. 1971 ஆம் ஆண்டு பாலியல்

விளக்குகள் மூலமும், தசை ஊக்கிகள் மூலமும் மேற்கொள்ளப்பட்டதுடன், அவை தாதியர்களாக பணியாற்றிய அருட் சகோதரிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரிவில்

1954 ஆம் ஆண்டு இங்கிலாந்திலும் நியூயோர்கிலும் வாத நோய் மற்றும் இயன் மருத்துசிகிச்சை பற்றிய விசேட பயிற்சிப் பெற்ற டாக்டர் பிராங் பெரேரா மற்றும் டாக்டர் எல்.பீ.பி. குணவர்தன ஆகியோா் இத்துறையில் நியமனம் பெற்றனர். இந்த வருடத்தில் டாக்டர் குணவர்தன அவர்கள் கண்டி வைத்தியசாலைக்கு சென்றதுடன் அவர் மீண்டும் 1954 ஆண்டு தனது சேவையை வழங்கும் பொருட்டு கொழும்புக்கு வருகை தந்தார். அக்காலக் கட்டத்தில் இத்துறை பொது (*General*) மற்றும் விசேட (*Special*) என வகுக்கப்பட்டு, முன்னேற்றப்பட்டது.

1920 ஆம் ஆண்டு தேரர்களுக்காக ஒதுக்கப்பட்ட தேரர்களுக்கான வார்ட்டு வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயினும், இதன் அமைவிடம் பற்றி தெளிவானதொரு குறிப்பினை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

1925 ஆம் ஆண்டு வோர்ட் பிளேஸில் (*Ward Place)* வீடொன்றில் பற்சிகிச்சை நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது. 1924




அன்றைய வெளி நோயாளர் பிரிவு

நோய்களை இனங்காண்பதற்காக நிறுவப்பட்ட பிரிவும் 1962 ஆம் ஆண்டு இரத்த வங்கியாக நிறுவப்பட்ட ஆய்வுக்கூடமும் பின்னர் பாலியல் நோய்களை கட்டுப்படுத்துவதற்கான கருத்திட்டம் சார்ந்த நிறுவனமாகவும் தேசிய இரத்தம் வழங்கும் நிறுவனமாகவும் தோற்றம் பெற்றது. 1978 ஆம் ஆண்டு எமது வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூட சேவைகளை ஒன்றிணைத்த "நோயியல் பிரிவு" என புறம்பானதொரு பிரிவாக உருவாக்கப்பட்டது. அது டாக்டர் *R* ரத்தினவேல் அவர்கள் தலைமை வகித்தார். திரு இராசநாயகம் பிரதான மருத்துவ ஆய்வு தொழிநுட்பவியலாளராவார். முதன் முதலாக வெளியார் நோயாளர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இது தற்போது *X* கதிர்ப் பிரிவினரால் பயன்படுத்தப்படுகின்றது.

முடவியல் மற்றும் இயன்மருத்துவம் நோயாளர் பிரிவின் வரலாற்றினை நோக்குகையில் 1920 முதல் 1930 ஆம் ஆண்டுக் கால பகுதி வரை அதனை பின்நோக்கி பார்க்க முடியும். அக்காலக் கட்டத்தில் மின்னியல் மருத்துவம் (*Electro Therapy* மற்றும் உடற் பிடிப்பு *(Massage*) போன்றவை வெப்பக் கருவி



1947 - 1948 ஆம் ஆண்டில் வைத்தியசாலையின் பணியாளர்கள்.

இயன் மருத்துவ சிகிச்சைகள் 1949 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், அவ்வாறான ஒன்றை ஆரம்பிப்பது சம்பந்தமாக டாக்டர் ஆர் நியு ஹியூபர் அவர்களுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அவரின் தலைமைத்துவத்தின் கீழ் புதிய விளக்குகள் பொறுத்தப்பட்டன. நீளலை மின் தீய்ப்பு மருத்துவம், புற சிவப்பு கதிர் விளக்குகள் மற்றும் ஊக்கிகளும் பொறுத்தப்பட்டன. 1951 ஆம் ஆண்டு வரை இங்கு இயன் மருத்துசிகிச்சையாளர்கள் இருக்கவில்லை என்பதுடன், 1951 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பயிற்சிப் பெற்ற இயன் மருத்துவ சிகிச்சையாளர் ஒருவர் இங்கு வருகை தந்தார்.

ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டாலும் அது 1925 ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது. 1920 ஆம் ஆண்டு பொது பல் சுகாதார சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதெனினும் அதனூடாக முதனிலை பற்சிகிச்சைகள் மாத்திரமே வழங்கப்பட்டன

பிரதான சத்திர சிகிச்சை எதுவும் இத்துறையில் இடம்பெறவில்லை. வைத்தியசாலையின் கதிரியக்க பிரிவு 1926 ஆம் ஆண்டு நிர்வாக கட்டிடத்திற்குள் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு முதலாவது கதிரியல் வைத்தியராக எச்.ஓ.குணவர்தன அவர்கள் பணியாற்றினார். முதலாவது கதிரியல் தொழில்நுட்பவியலாளர்களாக திரு. எம்.எல்.வி.கெஸ்பஸ் மற்றும்



1963 ஆம் ஆண்டு முதலாவது கதிரியல் சிகிச்சை உபகரணமொன்றில் சிகிச்சை வழங்குவதற்கு நோயாளிகளை தயார்படுத்துதல்

ஜே.ஏ.என். பர்னாந்துப்பிள்ளே ஆகியோர் கடமையாற்றினர். 1929 ஆம் ஆண்டு எமது வைத்தியசாலையின் கதிரியல் பிரிவில் புற்று நோயாளர்களுக்கான ரேடியம் (*Radium*) பயன்படுத்தப்படுதல் ஆரம்பிக்கப்பட்டதுடன், மஹரகம புற்று நோய் நிறுவகத்தில் புற்று நோய் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படும் வரை அச்சிகிச்சைகள் இவ்விடத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. 1949 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த டாக்டர் நியூ ஹியூபர் அவர்களினால் இயன் மருத்துவ சிகிச்சை வைத்தியசாலைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. கதிரியல் தொழில்நுட்பவியலாளராகிய கெஸ்பஸ் அவர்களின் தலைமைத்துவத்துடன், முதல் முறையாக இக்கட்டிடத்திற்குள் முதலாவது மின்னியல் மருத்துவ பொறியியல் நிறுவகம்(*Electro Medical Engineering*) நிறுவப்பட்டதுடன், அவர் முதலாவது மின்னியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளராக நியமிக்கப்பட்டார்.

வைத்தியசாலைகளின் பணியாளர்களை பற்றி கருத்தில் கொள்ளும் போது பம்பலபிட்டிய வஜிராராம விகாரையில் அப்போதிருந்த அதி வணக்கத்துக்குரிய தேரர்கள் கொழும்பில் சனநெருக்கடி மிக்க வைத்தியசாலைகளுக்கு வருகை தந்து பிரித் பாராயணம் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் 1930 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. உலக யுத்தத்தின் காரணமாக அடிக்கடி வைத்தியசாலைக்கு வருகை தந்து உதவிகள் வழங்கப்பட்டதுடன், 1950 ஆவது தசாப்தத்தில் ஒழுங்கமைந்த வகையில் வைத்தியசாலை சேவைகளுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. வைத்தியசாலையை சுற்றியிருந்த விகாரைகளையும் தொடர்புப்படுத்திக் கொண்டு நோயாளிகளுக்கு ஆசி வேண்டி வழிபாடுகளை நடாத்தும் பொருட்டு வைத்தியசாலைகளுக்கு வருகை தந்ததுடன், வைத்தியசாலை வளவில் அமைந்திருந்த பௌத்த வழிப்பாட்டுக் கூடத்தில் அடிக்கடி வழிபாடுகளும் இடம்பெற்றிருக்கின்றன. 1960 ஆம் தசாப்தத்தில் மடிகே பஞ்ஞாசீக மகா தேரர், வஜிராராமையில் வசித்து வந்த பியதஸ்சீ தேரர் மற்றும் நாரத மகா தேரர், அம்பிட்டிய ஸ்ரீ ராகுல மகா தேரர் மற்றும் பன்னில உபஸ்சி மகா தேரர் மற்றும் வஜிராராம, கெத்தாராம வித்தியோதய பிரிவினாக்கள் மற்றும் ஏனைய விகாரைகளை சேர்ந்த தேரர்கள் அடிக்கடி கண் வைத்தியசாலைக்கும், பெரிய ஆஸ்பத்திரிக்கும் வருகை தந்து நோயாளிகளினதும், வைத்தியசாலையினதும் தேவைகளை ஆராய்ந்தறிந்து உதவிகளை வழங்கினர். இந்த தேரருக்கிடையில் அதி வணக்கத்திற்குரிய பண்ணில விபச மகா தேரர் நோயாளிகளுக்கு உதவி வழங்குவதற்கு அதிக அக்கறை காட்டியதுடன், ஏனைய தேரர்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் வஜிராராமையுடன் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக அடிக்கடி வைத்தியசாலை சேவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன், அவரின் ஆதரவாளர்களாக இருந்த நன்கொடையாளர்களினது ஒத்துழைப்பையும் பெற்று தந்தார். வணக்கத்திற்குரிய பண்ணில விபச மகா தேரருடைய ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்த வைத்தியசாலை சேவை நிலையம் வைத்தியசாலை சேவைகள் சபை என 1974 ஆம் ஆண்டின் பின்னர் ஒழுங்கமைந்தது. சுயவிருப்பில் முன்வந்த அனைத்து தரப்பையும் பிரதிநிதித்துவப்படுத்திய வைத்தியசாலை பணியாளர்களையும் பக்தர்களையும் இந்த வைத்தியசாலை சேவை சபை கொண்டிருந்தது.

1930 ஆம் ஆண்டு பணியாற்றிய சத்திர சிகிச்சை நிபுணர்களில் அநேகமானவர்கள் பொது சத்திர சிகிச்சை நிபுணர்களாகவே இருந்தனர். அவர்கள் பல்வேறுபட்ட வைத்தியசாலைகளில் சேவையாற்றியதுடன், சுகாதார பணிப்பாளராக பிரித்தானிய இனத்தவர் ஒருவரே பணியாற்றினார். இரண்டாவது உலக யுத்த காலத்தில் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் எம். வீ.பி.பீரிஸ் மற்றும் பேராசிரியர் போல் ஆகிய இருவரும் இராணுவ வைத்தியசாலையின் பிரதானிகளாக பணியாற்றினர். பயிலுனர் மருத்துவர்கள் பலர் அவர்களின் கீழ் பணியாற்றினர். இக்காலக் கட்டத்தில் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் வெளி நோயாளர் பிரிவு இராணுவ வைத்தியசாலையாக பயன்படுத்தப்பட்டதுடன், நோயாளிகளை பராமரிப்பதற்காக தற்போது சென் ஜோசப் கல்லூரி, சென் பீற்றர்ஸ் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் கல்லூரி மற்றும் நாலந்த கல்லூரி ஆகிய பிரதேசங்களில் காணப்பட்ட கட்டிடங்கள்




மார்க் ஞாபகார்த்த வாட்டு

பயன்படுத்தப்பட்டு வந்தன.

இக்காலக் கட்டத்தில் இரண்டு இயல் மருத்துவர்கள் இந்நோயாளிகளுக்காக தங்கள் சேவைகளை வழங்கியுள்ளனர். 1930 - 1940 ஆம் ஆண்டுகளில் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சைக்கூடம் *D* பிரதான சத்திர சிகிச்சைக்கூடமாக இயங்கியது. சத்திர சிகிச்சை நிலையங்கள் *A*, *B*, *C* போன்றவற்றின் சேவைகள் 40 ஆம் ஆண்டின் இறுதி காலப் பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டன. இந்த சத்திர சிகிச்சைக்கூடங்களில் *A* கூடம் எலும்பியல் சத்திர சிகிச்சைக்கூடமாக இயங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. டாக்டர் எம்.வீ.பி. பீரிஸ், *LMS* (1925) *FRCS (Eng) 1929* சத்திர சிகிச்சை பிரிவின் பிரதானியாக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் 1932 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வந்துள்ளதுடன் அவருடைய காலகட்டத்தில் எலும்பியல் சேவையை கொழும்பு வைத்தியசாலையில் ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக செயற்பட்டுள்ளார்

மார்க் ஞாபகார்த்த மருத்துவமனைக்கூடம் 1938 ஆம் ஆண்டு அருட் சகோதரிகள் நோயாளர்களாக அனுமதிக்கப்படும் போது சிகிச்சை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்டதுடன், 1941 ஆம் ஆண்டில் அருட் தந்தையர்களின் பயன்பாட்டிற்காக நிறுவப்பட்ட □குடர்டி□ ஞாபகார்த்த ஞாபகார்த்த வார்ட்டும் தற்போது காணக் கூடியதாக இருப்பதுடன், அந்த வார்ட்டுகள் 29 ஆம் மற்றும் 38 ஆம் வார்ட்டுகளாக அழைக்கப்படுகின்றன. அது 29 ஆம் வார்ட்டுக்கும் 38 ஆம் வாரட்டுக்கும் இடையில் அமைந்துள்ளது.

சிறுவர்களுக்கான எலும்பியல் சிகிச்சைகளுக்காக கான் ஞாபகார்த்த வாரட்டு (*Khan Memorial Ward – Ward* 51 ) 1939 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அதன் ஆரம்பக் கர்த்தாவாக டாக்டர் லக்‘மன் ராஜகருணா எனப்படும் எலும்பியல் விசேட வைத்திய நிபுணர் பணியாற்றியிருக்கின்றார்.

எலும்பியல் கிளினிக் 1939 ஆம் ஆண்டு எலும்பியல் வைத்திய நிபுணர் டாக்டர் முலர் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1982 ஆம் ஆண்டு எலும்பியல் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ரியன்ஸி பீரிஸ் அவர்கள் காயங்களுக்கு மருந்து போடும் அறை அமைக்கப்படுவதற்கு முன்னோடியாக செயற்பட்டார்.

1939 ஆம் ஆண்டு (இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட வருடம்) மே மாதம் 09 ஆந் திகதி கொழும்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதன் அதிபராக செல்வி பியட் அவர்கள் பணியாற்றியுள்ளார்.

1942 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதையடுத்து, அது போதனா வைத்தியசாலையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. 1936 ஆம் ஆண்டு முதல் பேராசிரியராக திரு. மில்ரோய் போல் (சத்திர சிகிச்சை), திரு. பி.பீ.பர்னாந்து (மருத்துவம்) மற்றும் ஜி.ஏ.டப்ளியூ. விக்கிரமசூரிய (மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய்கள்) ஆகிய மூன்று பேரும் நியமிக்கப்பட்டனர்.

1951 ஆம் ஆண்டு முதலாவது நரம்பியல் விசேட வைத்திய நிபுணர் ஜோர்ஜ் ரத்னவேல் அவர்கள் நியமிக்கப்பட்டார். 44 ஆம் இலக்க மருத்துவமனைக்கூடம் (ஆண்கள்) மற்றும் மருத்துவமனைக்கூடம் 47 – 46 (பெண்கள்) ஆகியவற்றிலிருந்து சில கட்டில்களை ஒதுக்கி நரம்பியல் நோய்களுக்கான சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. டாக்டர் ரத்னவேல் அவர்கள் ஓய்வுப் பெற்றதனையடுத்து 1972 ஆம் ஆண்டில் விசேட வைத்திய நிபுணர் டாக்டர்

ஜே.பி.பீரிஸ் அவர்கள் நரம்பியல் நோயாளர்களுக்கான சிகிச்சைகளுக்கு பொறுப்பாளராக சேவைகளை ஆரம்பித்துள்ளார். அவர் 44 ஆம் இலக்க வார்ட்டில் கட்டில்களை ஒதுக்கி ஒரு மூச்சுக்காற்றூட்டப் பொறி (*ventilatiors*) இரண்டு இருதய நோய் கண்காணிப்பு கருவிகளையும் கொண்டதாக நரம்பியல் நோய்களுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவினை ஆரம்பித்தார். அதனையடுத்து 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆந் திகதி புதிய நரம்பு நோயியல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் முதலாவது எலும்பியல் தொழில்நுட்ப கூடம் 1947 ஆம் ஆண்டின் பாரளுமன்ற விசேட சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

1952 ஆம் ஆண்டு இன்றும் நிர்வாக கட்டிடமாக செயற்படுகின்ற பண்டார நாயக்க கட்டிடம் ஐந்து மாடிகளையும், சத்திர சிகிச்சைக் கூடங்களையும், வாட்டுகளையும் நோய்துாய்மை தீர்வாக்கப் பிரிவையும் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டது.

1952 ஆம் ஆண்டு மிஸ். ஜெய்லர் ஒரு அமெரிக்க பெண்மணி ஏழு அருட் சகோதிரிகளையும் இணைத்துக் கொண்டு வைத்தியசாலையில் சமையலறையை ஆரம்பித்தார். அச்சந்தர்ப்பத்தில் பிரதான சமையலறைக்கு மேலதிகமாக ஊழியர்களுக்கான சமையலறையும் ரிஜண்ட் வீதியின் சமையலறையுமாக மூன்று சமையலறைகள் இருந்தன. 1972 ஆம் ஆண்டு தற்போதைய பிரதான சமையலறையும், ஊழியர்களுக்கான சமையலறையாகவும் அக்காலகட்டத்தில் விஸ்தரிக்கப்பட்டது.

முதலாவது இருதய சத்திர சிகிச்சைக்கூடம் 1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1955 ஆம் ஆண்டு முதலாவது இருதய சத்திர சிகிச்சை (*Open Heart Surgery*) ஆரம்பிக்கப்பட்டது. 6 கட்டில்களையும், வளி சீராக்கிகளையும் கொண்டதாக தீவிர சிகிச்சைப் பிரிவு அதற்கண்மையிலேயே அமைக்கப்பட்டது.



ஆரம்பகால இருதய சத்திர சிகிச்சையொன்று

அது 1968 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆந் திகதி சுகாதார அமைச்சர் கௌரவ ஈ.எல். சேனாநாயக்க அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

1953, 01 ஆம் திகதி வெளி நோயாளர் பிரிவில் இதய மின்னலை வரைவு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. ஒரு நோயாளிக்காக அரை மணித்தியாலம் போன்றதொரு கால எல்லை செலவிடப்பட்டதுடன், ஒரு நாளைக்கு ஆறு நோயளாளிகளுக்கு மாத்திரமே இச்சேவை வழங்கக்கூடியதாக இருந்தது.

1955 ஆம் ஆண்டு முதலாவது சிறுநீர் பிறப்புறுப்பு சார்ந்த விசேட வைத்திய நிபுணர் (சிறுநீரியல் வல்லுனர்) டாக்டர் ஜோர்ஜ் நெல்சன் பெரேரா அவர்கள் நியமிக்கப்பட்டார்.

அதனையடுத்து இப்பிரிவு 01 ஆம் பிரிவு 02 ஆம் பிரிவு என இரண்டு பகுதிகளாக வகுக்கப்பட்டன. இயன் மருத்துவ மற்றும் தொழில்வாண்மை சார் சிகிச்சை கல்லூரி கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு இணைந்ததாக 1957 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

1957 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கதிரியல் கல்லூரி அச்சந்தர்ப்பத்தில் தற்போது *X'ray* அறிக்கையிடல் நிகழும் இடத்தில் நிறுவப்பட்டது (*Reporting Room*). பின்னர் இப்பிவிவு ஒளிப்பட (*X'ray* ) பிரிவு அண்மையிலுள்ள கட்டிடத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டது.

ஆஸ்பத்திரி உள்ளிட்ட நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மருந்தாளர்கள் சேவை 1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் உள்ளக மருந்தகம் இரண்டு மருந்தாளர்களின் கீழ் பேணி வரப்பட்டது. அப்போது தங்கி சிகிச்சை பெரும் நோயளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் இரண்டு மருந்தாளர்களைக் கொண்ட பணியாளர் குழு போதுமானதாக இருந்தாலும் 1970 ஆம் ஆண்டின் போது இப்பிரிவில் 15 மருந்தாளர்கள் பணியாற்றி வந்தனர். 24 மணித்தியாலங்களும் சேவை வழங்குகின்ற முதலாவது மருந்தக சேவையாக இது மாறியது. தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் பொதுவாக நோயாளர்களுக்கான சிகிச்சைகள் விரிவானதையடுத்து அதனுடைய சேவைகளை மேலும் வினைத்திறன்மிக்க வகையில் பேணிக் கொள்ளும் பொருட்டு, தற்போது பெரிய ஆஸ்பத்திரியில் சமையலறை உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்காக கட்டியெழுப்பப்பட்ட

மூன்று மாடி கட்டிடத்தில் மேல் மாடிக்கு இது கொண்டுச் செல்லப்பட்டது. மருந்தக கல்லூரியும் அக்கட்டிடத்திலேயே நிறுவப்பட்டது.

1958 பெப்பரவரி 02 ஆந் திகதி அதி எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களினால் சத்திர சிகிச்சை வாட்டும், சத்திர சிகிச்சை கூடமும், சத்திர சிகிச்சை கட்டிடத் தொகுதியும் திறக்கப்பட்டது. முதலாவதாக, சத்திர சிகிச்சை வாட்டுகளில் நரம்பியல் சத்திர சிகிச்சைகளுக்கான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. வைத்தியசாலையின் பண்டாரநாயக்க கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதையடுத்து, அதன் 4 ஆவது மாடி நரம்புசார் நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டது. இது முதலாவதாக 15 கட்டில்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான முன்னோடி பங்களிப்பை வழங்கும் விடயத்தில் வெளிநாட்டில் பயிற்சிப் பெற்று நாட்டுக்குத் திரும்பிய விசேட நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் டெரல் வேய்ன்மன் (*Darrel Weinman*) அவர்கள் பணியாற்றினார். இவர் விசேட நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ஏ.கப்ரால் அவர்களுக்கு ஒத்தாசையாய் அளித்து வந்தார். கிரமமாக 9 ஆம் வாட்டு ஆண்களுக்கான வாட்டாக 10 கட்டில்களையும், தீவிர சிசிச்சைப் பிரிவு 10 கட்டில்களையும் கொண்டதாகவும் அமைந்தது. பெண்கள் வார்ட்டு 10 கட்டில்களையும், சிறுவர்களுக்கான வார்ட்டு 10 கட்டில்களையும் கொண்டதாக வளர்ச்சியடைந்தது. தீவிர சிகிச்சை பிரிவில் பிளீஸ் மூச்சுக்காற்றூட்டப் பொறி என்று அழைக்கப்படும் இரண்டு உபகரணங்கள் காணப்பட்டதுடன் அங்கு ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட அனைத்து நோயாளிகளும் சிகிச்சைப் பெற்றனர்.

1960 ஆம் தசாப்தத்தின் ஆரம்ப கால பகுதிக்கு முன்னர் சத்திர சிகிச்சை கூடத்துடன் தொடர்புடையதாக இருந்த இரத்தம் வழங்கும் முறைமை விசேட வைத்திய நிபுணர் டாக்டர் பேர்சி குணவர்தன அவர்களின் கீழ் இயங்கியது. 1962 ஆம் ஆண்டு கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் இரத்த வங்கியின் தலைவராக நியமனம் பெற்றதையடுத்து புறம்பாக கட்டிடமொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

1960 ஆம் ஆண்டு நரம்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவில் மூளை மின்னலை பதிவாளர் பிரிவொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டு வெளி நோயாளர் பிரிவில் தாபிக்கப்பட்டிருந்த இது நரம்பியல் மருத்துவ சத்திரசிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டது. 1988 ஆம் ஆண்டில் முதலாவது மூளை மின்னலை பதிவாளர்கள் பயிற்சிக் கல்லூரி நரம்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவில் 04 பயிலுனர்களைக் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டதுடன், 1997 ஆம் ஆண்டு அப்பயிற்சிக் கல்லூரி நரம்பியல் மருத்துவ பிரிவிற்கு மாற்றப்பட்டது.

59 ஆம் இலக்க வாட்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக மன நோயாளர்களுக்காக சிகிச்சை வழங்கும் வாட்டாக மாற்றப்பட்டது. 1960 ஆம் தசாப்தத்தின் இறுதி பகுதியில் இது தாபிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பிரதானியாக கடமையாற்றியவர் பேராசிரியர் ஸ்டென்லி திஸாநாயக்க அவர்களாவார். 1969 ஆம் ஆண்டு டாக்டர் சி.பி.விஜயசிங்க அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1969 ஆம் ஆண்டு தற்போதைய கண் வைத்தியசாலை நிறுவப்பட்டதையடுத்து வெறுமையாகிய விக்டோரியா ஞாபகார்த்த கட்டிடத்தில் திடீர் விபத்து பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. அது 1967 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆந் திகதி கௌரவ டட்லி சேனாநாயக்க அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தற்போது நாம் காண்கின்ற திடீர் விபத்து பிரிவு 1991 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 15 ஆந் திகதி மேதகு ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு திடீர் விபத்து பிரிவிற்கு தனியானதொரு பணிப்பாளர் பதவியொன்று உருவாக்கப்பட்டது.

1990 முதல் 2000 ஆம் ஆண்டு வரை டாக்டர் ஹெக்டர் வீரசிங்க அவர்களும், 2001 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை டாக்டர் அனில் ஜயசிங்க அவர்களும், 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை டாக்டர் பிரசாந்த ஆரியவன்ஸ அவர்கள் பிரதி பணிப்பாளராகவும் கடமையாற்றினர். 2013 ஆம் ஆண்டு டாக்டர் எச்.எம். கே. விக்கிரமநாயக்க அவர்கள் பிரதி பணிப்பாளராக தனது பணிகளை ஆரம்பித்தார்.

இலங்கையின் முதலாவது தீவிர சிகிச்சை பிரிவு சத்திர சிகிச்சை தொகுதியில் 1968 ஜுன் மாதம் 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அது அப்போதைய சுகாதார அமைச்சர், பாரளுமன்ற உறுப்பினர் ஈ.எல் .சேனாநாயக்க அவர்களினாலேயே ஆரம்பிக்கப்பட்டது. அங்கு 06 கட்டில்கள் இருந்தன. இந்த தீவிர சிகிச்சை பிரிவின் ஆரம்பத்துடன், இலங்கை மருத்துவ வரலாற்றில் இமேர்ஜன்சி ட்ரொலி (*Emergency Trolley*) எண்ணக் கரு சேர்ந்தது.

1970 ஆம் ஆண்டில் விசேட வைத்திய நிபுணர் ஏ.பி.விஜயசிங்க அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை முறை அக்காலத்தில் அந்தளவிற்கு பிரபல்யம் அடைந்திருக்கவில்லை. தற்போது 04 ஆம் இலக்க வார்ட்டு அமைந்துள்ள இடத்தில் இரண்டு அறைகளில் முதலாவதாக நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

போ'க்குப் பிரிவின் ஆரம்பம் பற்றி சரியான தகவல்களை உரிய முறையில் தேடிக் கொள்வதற்கு அசௌகரியமாக இருப்பினும், தற்போது கண்டறியப்பட்ட தகவல்களுக்கேற்ப அது 1967 ஆம் ஆண்டு ஏப்றல் மாதம் 11 ஆந் திகதி தாபிக்கப்பட்டுள்ளது.

இருதய சிகிச்சை பிரிவை முதலாவதாக ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக செயற்பட்டவர் டாக்டர் ஐ.ஒ.ஒபேசேகர அவர்களாவார். 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த புதிய பிரிவிற்கு 02 வாட்டுகளும், ஒரு தீவிர சிகிச்சை பிரிவும் உள்ளடங்கும். தற்போது 03 வார்ட்டுகள் காணக்கூடியதாக இருக்கின்றன (வாட்டு இல. 60, 61, 70). இதற்கு 2014 ஆம் ஆண்டு மற்றுமொரு வாட்டு (வாட்டு இல.71) ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது 06 கூறுகள் இங்கு செயற்படுவதுடன், 13 விசேட வைத்திய நிபுணர்கள் பணியாற்றுகின்றனர். இரண்டு தீவிர சிகிச்சை பிரிவுகள் காணப்படுகின்றன. 1973 ஆம் ஆண்டில் *Angiographic* பிரிவு திறக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு வரை கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியிலும், கொழும்பு மத்திய மார்பு நோய் சார்ந்த கிளினிக் நிலையத்திலும், சுவாசம் சார்ந்த நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணராக டாக்டர் ஜே.ஆர்.வில்சன் அவர்கள் பணியாற்றினார். 1973 ஆம் ஆண்டில் மேற்படி பதவியை

டாக்டர் கிறிஸ்டோபர் குணபால அவர்கள் பொறுப்பேற்றார். இந்த டாக்டரின் கீழ் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களையுடைய நோயாளர்கள் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதுடன், வாரத்துக்கு ஒரு முறை சுவாசம் சார்ந்த நோய்களுக்கான கிளினிக் (நுரையீரல் சார்ந்த நோய்கள்) நடத்தப்பட்டன. டாக்டர் ஊராகொட அவர்களின் பின்னர் மத்திய மார்பு சார்ந்த கிளினிக் நிலையத்தில் டாக்டர் ஜி.என்.வி. விஜயகோன் அவர்கள் இப்பதவியினை பொறுப்பேற்றார். 1989 ஆம் ஆண்டு சுவாச தொகுதி சார்ந்த நோய்களுக்கான புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டன. டாக்டர் சம்பா ஜயசுந்தர அவர்களினால் இலங்கையில் முதன் முறையாக *Fibre Optic Bronchoscopy* (மூச்சுக் குழாய் சார்ந்த சோதனை) பற்றி ஆய்வுகள் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் ஆரம்பிக்கப்பட்டன. *A* சத்திர சிகிச்சைக் கூடத்தில் ஆரம்பிக்கப்பட்ட விடயம் இரண்டு ஆண்டுகளாக இடையறாமல் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. 1994 ஆம் ஆண்டிலிருந்து இச்சேவையை டாக்டர் கீர்த்தி குணசேகர அவர்கள் முன்னெடுத்துச் சென்றார். இச்சந்தர்ப்பத்தில் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் சுவாச நோய் சார்ந்த விசேட வைத்திய நிபுணராக டாக்டர் வி.என்.பி.தென்னகோன் அவர்கள் பணியாற்றினார். 2000 ஆம் ஆண்டில் பி.என்.பி. தென்னகோன் அவர்கள் ஓய்வு பெற்று சென்றதனையடுத்து இலங்கை தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றும் சுவாச நோய் சார்ந்த விசேட வைத்திய நிபுணர் பதவியை டாக்டர் அமித்த பர்னாந்து அவர்கள் பொறுப்பேற்றார்.



පිලිස්සුම් ඒකකය ඇරඹීමට පෙර

லேடி டி சொய்ஸா வார்ட்டு (*Lady de Soysa Ward*) எனும் பெயரில் 1912 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்டிடம் எரி காயங்களுக்கான பிரிவாக 1974.10.28 ஆந் திகதி விசேட சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜோ பர்னாந்து அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விடயத்தில் நிதி பங்களிப்பினை செல்வந்தராகிய சி.எஸ்.டி. சொய்ஸா அவர்கள் வழங்கியுள்ளார். இந்த வார்ட்டில் 08 கட்டில்கள் ஆண்களுக்காகவும், 10 கட்டில்கள் பெண்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. எரி காயத்திற்கான சத்திர சிகிச்சைக்கூடம், எரிக் காயங்களுக்கான கிளினிக் நிலையம் மற்றும் மறு சீரமைவு பிரிவு இந்த ஒட்டுமொத்தமான பிரிவிற்குள் உள்ளடங்கியிருந்தன.

1960 ஆம் ஆண்டுகளில் 56 ஆம் வார்ட்டின் ஒரு முனை சரும நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. 1978 ஆம் ஆண்டில் சரும நோயாளிகளுக்கான மருத்துவமனைக்கூடம் தனியான கட்டிடத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டது. அது தற்போது 13 ஆம் இலக்க வார்ட்டு என அழைக்கப்படுவதுடன், அப்போது கடற்படைக்காக இது அமைக்கப்பட்டிருந்தது. அது பலகைகளினாலான மேல் மாடிகளையும், ஒரு படிக்கட்டு தொகுதியையும் கயிறுகளினாலே இயக்கப்படுகின்ற தூக்கிகளையும் (*Lift*) கொண்ட பண்டைய காலத்து பண்புகளை கொண்டதான ஒரு பண்டைய முறையிலான ஒரு வாடாக இருந்தது. அந்த பிரிவிற்குள் 48 கட்டில்கள் காணப்பட்டதுடன், மேல் மாடியில் ஆண்களும், கீழ் மாடியில் பெண்களும் சிகிச்சை பெற்றனர். ஆரம்ப காலக் கட்டத்தில் சரும நோயாளிகளுக்கான கிளினிக் சிகிச்சை இருக்கவில்லை என்பதுடன், 1960 ஆம் ஆண்டுகளில் வெளி நோயாளர் பிரிவில் 36 ஆம் இலக்க அறை அதற்காக ஈடுபடுத்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் வெளி நோயாளர் பிரிவிற்கு வருகை தந்த வாந்திபேதி நோயாளர்களுக்காக சிறியதொரு இடம் ஒதுக்கப்பட்டதுடன், திடீர் தேவைகளின் போது சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. இவ்விடம் 1980 ஆண்டு ஜுன் மாதம் 08 ஆந் திகதி அப்போதைய வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஜோ. பர்னாந்து அவர்களினால் அவசர சிகிச்சை பிரிவாக திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியை புனரமைப்பதற்காக கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக இலங்கை அராசங்கமும், பின்லாந்து அரசாங்கமும் 1979 ஆம் ஆண்டு இணங்கிக் கொண்டனர். 1980 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப் பகுதியில் பின்லாந்திலிருந்து வருகை தந்த விசேட நிபுணர்கள் குழுவும் , இலங்கையின் விசேட நிபுணர்கள் குழுவும் இணைந்து பல்வேறு விதமான ஆய்வுகளை நடத்தினார்கள். பின்னர் 06 படிமுறைகளைக் கொண்ட திட்டமொன்று வகுக்கப்பட்டது. அதற்கு 15 முதல் 20 வருடங்கள் செல்லுமென கணக்கிடப்பட்டது. ஒட்டுமொத்தமாக மறுசீரமைப்பு கருத்திட்டத்திற்காக செலவிடப்படும் பணத்தொகையில் 85% ஐ பின்லாந்து அரசாங்கம் ஏற்றுக் கொண்டதுடன், எஞ்சிய 15% ஐ இலங்கை அரசாங்கம் செலவிட வேண்டுமென்றும் இணங்கிக் கொள்ளப்பட்டது. இதன் முதலாவது கட்டமாக அவசர வைத்திய பிரிவும், எலும்பியல் பிரிவும், காயபிரிவும் புதிய உபகரணங்களுடன் கொண்டதாக பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. புதிய கட்டிடத்தில் இவ்விடயத்தில் ஒழுங்குறுத்தல் கற்கைப் பிரிவொன்றும்

ஸ்தாபிக்கப்பட்டது. ரீஜன்ட் வீதியிலுள்ள வைத்தியர்களின் வீட்டுக் கட்டிடத் தொகுதி முன்னர் வைத்தியசாலையின் பணியாளர்களினால் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதைப் புதுப்பித்து மிகவும் வினைத்திறன்வாய்ந்த வகையில் பராமரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பின்லாந்தின் கருத்திட்டத்தின் ஊடாக வாய்ப்பு கிட்டியது.

ஆரம்பம் பற்றி தெளிவானதொரு குறிப்பு இல்லாவிடினும் வைத்தியாசாலையின் பிரேத அறை தற்போது திடீர் விபத்துப் பிரிவு மற்றும் எலும்பியல் பிரிவின் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைந்துள்ள இடத்திலேயே முதலாவதாக அமைந்திருந்தது. ஆராய்ந்தறிந்த தகவல்களுக்கேற்ப அங்கு குளிருட்டி வசதிகள் இருக்கவில்லை. லெட்ஜ் (*Ledge*) மீது மரணித்தவர்களின் உடல்கள் வைக்கபட்டிருந்தாகவே குறிப்பிடப்படுகின்றது. பின்னர் பின்லாந்து உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆய்வுகூட கட்டிடத்தில் பிரேத அறை ஆரம்பிக்கப்பட்டது.1987 ஆம் ஆண்டு முன்னேடித்திட்டமாக இதனை ஆரம்பிப்பதற்கு நுண்ணுயிர் விசேட வைத்திய நிபுணர் எஸ்.டி. அத்துகொரள அவர்கள் முன்னின்று உழைத்தார். டாக்டர் எஸ் டீ.அத்துகோரளை அவர்களினால் ஆக்கப்பட்ட (*Infection Control Hand Book*) எனும் கைநூல் ஆக்கப்பட்டது. இலங்கையின் முதலாவது எச்ஜவீ நோயாளி 1987 இல் கண்டுபிடிக்கப்பட்டார்.

1997 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனதா பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஆக்கத்திற்கேற்ப அப்போது பிரேத அறையில் குளிருட்டி வசதிகள் இருந்துள்ளன. அங்கு 36 குளிருட்டிகள் காணப்பட்டுள்ளன. ஆயினும் அப்போது நிலவிய யுத்த நிலவரம் காரணமாக அங்கிருந்த வசதிகள் போதியதாக காணப்படவில்லை. தற்போது 56 குளிருட்டிகள் காணப்படுகின்றன. ஆகவே இடவசதி குறைபாடுகள் தற்போது குறைவாகவே காணப்படுகின்றது.

வைத்தியசாலையின் மருத்துவ அதிதீவிர சிகிச்சைப் பிரிவாக பத்து கட்டில்களைக் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு 1982.01.14 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. அது அப்போதைய சனாதிபதி மேதகு ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களினால் திறந்து வைக்கப்பட்டதுடன் அதன் மருத்துவ அதிகாரியாக டாக்டர்.ஜோ பர்னாந்து அவர்கள் பணியாற்றினார். இவ்விடயத்தின் முன்னோடியாக விசேட வைத்திய நிபுணர் பீ. டீ. த சில்வா அவர்கள் செயற்பட்டார். இந்த மருத்துவ தீவிர சிகிச்கை பிரிவிற்கு அண்மையிலேயே பின்னர் 41 ஆம் இலக்க வார்ட்டாக இலக்கிமிடப்பட்ட அப்போதைய 26 ஆம் இலக்க வார்ட்டுடன் இணைந்ததாக கூழ்மப்பிரிப்பு (*Dialyses Unit*) பிரிவு தாபிக்கப்பட்டது. 1987.05.06 ஆம் திகதி சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை (உறுப்புப் பொருத்துகை) பிரிவு பெரியாஸ்பத்திரியில் திறந்து வைக்கப்பட்டது.

நீரிழிவு கிளினிக் 1980-1990 ஆம் தசாப்பத்தில் வெளிநோயாளர் பிரிவினால் நிருவகிக்கப்பட்டது. அக்காலத்தில் கடமைப்பொறுப்பு வைத்தியராக டாக்டர் சல்காது அவர்கள் பணியாற்றியதுடன் 1990 – 2000 தசாப்பத்தத்தில் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் சரத் காமினி த சில்வா அவர்கள் இப்பணியை நிறைவேற்றினார். 2000 – 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் டாக்டர் கோட்டேகொட அவர்களின் தலைமையிலும் பின்னர் விசேட வைத்திய நிபுணர் நொயெல் சோமசுந்தரம் அவர்களின் கீழ் இற்றைவரையும் இப்பிரிவு இயங்கிவருகின்றத.

வைத்தியசாலையின் சலவைக்கூடம் 1994 ஆம் ஆண்டு அதாவது 20 வருடங்களுக்கு முன்னர் பினலாந்து உதவித்திட்டத்தின் கீழ் முதலாவது கட்டமாக வைத்தியசாலையிலேயே நிறுவப்பட்டது. அங்கு இரண்டு 90 கிலோகிராம் சலவை இயந்திரங்களும் இரண்டு 50 கிலோகிராம் சலவை இயந்திரங்களும் ஒரு 25 கிலோகிராம் சலவை இயந்திரமும் நான்கு 50 கிலோகிராம் உலர்த்தும் இயந்திரங்களும் ஒரு நீராவி பொயிலரும் ஒரு மினுக்கும் இயந்திரமும் பொருத்தப்பட்டது.

வைத்தியசாலையின் மருத்தவ வாட்டுகள் 1995 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி மேதகு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களினால் திறந்துவைக்கப்பட்டதுடன் அச்சந்தர்ப்பத்துக்கு அப்போதைய சுகாதார அமைச்சர் கௌரவ ஏ.எச்.எம் பவுசி அவர்களும் பங்கேற்றார்.

1996.01.31 ஆம் திகதி எங்கள் வைத்தியசாலைக்கு மறக்க முடியாததொரு தினமாகும். அவ்வாறு கூறுவதற்கு காரணம் ஒரு சில நிமிடங்களுக்குள் 1200 நோயாளிகள் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பம் என்பதனால் ஆகும். மத்திய வங்கிக்கு நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் காரணமாக காயப்பட்டவர்கள் இவ்வாறாக அனுமதிக்கப்பட்டதுடன் அதில் 76 நோயாளிகள் மரணமடைந்தனர்

வைத்தியசாலையின் ஆவணக்கூடம் வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு அண்மித்த ஒரு இடத்தில் 1980 ஆம்



ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் ஒரு சுகாதார முகாமைத்துவ உதவியாளரும், மருத்துவமனைக்கூட எழுதுனர்கள் மூவரும், ஒரு கனிட்ட ஊழியரும் இதில் பணியாற்றினர். பின்னர் தற்போது இப்பிரிவு அமைந்துள்ள இடத்திற்கு 1980 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இப்போதும் ஒரு சுகாதார முகாமைத்துவ உதவியாளரும், 03 மருத்துவமனைக்கூட எழுதுனர்களும், 05 கனிட்ட ஊழியர்களும் இதில் பணியாற்றுகின்றனர்

தேசிய நஞ்சுத் தகவல் பிரிவு, சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவகம் எனப்படும் (*International Development Research Centre, Canada*) கனேடிய கருத்திட்டத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்நிறுவகம் 1988 ஆம் ஆண்டு முதலாம் திகதி நிறுவப்பட்டது. பேராசிரியர் ரவீந்ர பர்னாந்து அவர்களின் தலைமையில் இது நிறுவப்பட்டது. தற்போது உலக சுகாதார அமைப்புடன் இணைந்த *Association of Clinical Toxicology and Poisons Control Centre* இன் முழு அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டுள்ளதுடன் *UK toxbase* மற்றும் *Thailand Poison Information Network* வலையமைப்புடன் இணைந்து பணியாற்றுகின்றது. இந்தப் பிரிவு முழு நாட்டிற்கும் 24 மணித்தியாலங்களும் தகவல்களை வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுவருவதுடன் தகவல்களை பெற்றக்கொள்வதற்கான வலையமைப்பொன்றையும் கொண்டு இயங்குகின்றது. இப்பிரிவுடன் 011 2686143 தொலைபேசி இலக்கத்துடனும் *infotoxlanka@gmail.com* மின்னஞ்சல் முகவரியுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

2000 ஆம் ஆண்டில் விசேட வைத்திய நிபுணர் சுதத் குணசேகர அவர்களின் தலைமையில் நரம்பியல் மருத்துவ பிரிவில் நரம்பு இயக்கயியல் பிரிவு தாபிக்கப்பட்டது. இதன் ஊடாக நரம்பு சார்ந்த நோயாளரகளுக்கும் ஏனைய நோயாளர்களுக்கும் சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு கிட்டுகின்றது.

2000 ஆம் ஆண்டில் இலங்கையில் முதலாவது முறையாக நியமிக்கப்பட்ட நரம்பு இயக்கயியல் மருத்துவ விசேட நிபுணர் சுதத் குணசேகர அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட நரம்பு இயக்கயியல் பிரிவில் *BSER, VEP, VEEG* பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

2000 ஆம் ஆண்டில் நரம்பியல் விசேட வைத்திய நிபுணர் ஜகத் விஜேசேகர அவர்களின் தலைமையில் பேச்சு நோயியல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஊடாக பேச்சு கோளாறுகள், மொழிக் கோளாறுகள் மற்றும் விழுங்குதல் சார்ந்த கோளாறுகளுடைய நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை தேசிய வைத்தியசாலையுடன் தொடர்புடையதாக பற்சிகிச்சை நிறுவகம் பிரதி பணிப்பாளர் ஒருவரின் கீழ் இயங்க ஆரம்பித்தது. 2000 ஆம் ஆண்டில் எம்.ஆர்.ஐ இயந்திரம் வைத்தியசாலையில் இயங்க ஆரம்பித்தது.

முதலாவது குருதிக்கலன் சார்ந்த சத்திர சிகிச்சைப் பிரிவு பேராசிரியர் செரிப்டின் அவர்களின் எண்ணக்கருவிற்கேற்ப சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். தமிந்த ராஜமந்தரியின் தலைவீட்டில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. அது பழைய விக்டோரியா ஞாபகார்த்த கட்டிடத்தின் கீழ் மாடியிலேயே தாபிக்கப்பட்டது.

நீர் வெறுப்பு நோய்க்கான சிகிச்சைப் பிரிவு தேசிய வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் 2 ஆம் இலக்க அறையில் 2005.04.05 ஆம் திகதி



මුල් ගල තැබීම

ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் வெளி நோயாளர் பிரிவில் நீர் வெறுப்பு நோய்க்கான தடுப்பூசி *(Anti rabies)* மற்றும் எதிர்ப்பு ஊனீர் *(anti serum)* வழங்கப்படவேண்டிய நோயாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வாட்டுகுள்ளே கூறுணர்வு பரிசோதனை *(sensitivity test)* வழங்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பிரிவினை ஆரம்பிப்பதற்காக அப்போதைய பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ராணி பர்னாந்து அவர்கள் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டனர். இது டாக்டர் அமில் குணசேகர எனும் திறமையான வைத்தியரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

சவுதி அரசின் உதவியுடன் நரம்பு காய கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு அடிக்கல் நாட்டும்



மூன்றாவது மருத்துவ வாட்டுத் தொகுதியை திறந்து வைத்தல்

நிகழ்விற்கு கௌரவ அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா அவர்களின் அழைப்பின் பேரில் 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி மேதகு சனாபதி மஹிந்த ராஜபக்' அவர்கள் வருகைத்தந்து அடிக்கல் நாட்டி வைத்தார். இச்சந்தர்ப்பத்திற்கு சவதி அரேபிய அரசின் இலங்கைக்காகன தூதுவர் மொஹமட் அல் அலி அவர்களும் கலந்துகொண்டார்.

ஆறு வருடங்கள் சென்ற இந்த பாரிய பணி 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. கௌரவ அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அவரகளின் அழைப்பின் பேரில் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்' அவர்களினால் இது திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சவுதி அரேபியாவின் தூதுவர் கௌரவ அப்துல் அசீஸ் ஏ.ஆர். ஜமாஸ் அவர்களும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் உப தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் கௌரவ யூசுப் அலி பசம் அவர்களும் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலையின் மருத்துவ பிரிவுக்கு அனுமதிக்கப்படும் நோயர்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய அசௌகரியங்கள் குறைப்பதற்காக நவீன மூன்றுமாடிக் மருத்துவ வாட்டுத் தொகுதி 2013 ஆம் ஆண்டு ஏப்றல் மாதம் 19 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்' அவர்களினால் திறந்து வைக்கப்ட்டது. இந்த வைபவத்தில் கௌரவ அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அவர்களும் கௌரவ பவுசி அவர்களும் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க அவர்களும் பங்கேற்றனர்.

2014 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதி இலங்கை தேசிய கண் வங்கியுடன் இணைந்ததாக விழி வெண்படலங்களை சேகரிக்கும் நிலையம் பிரேத அறைக்கு அண்மித்ததொரு இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 24 மணித்தியாலங்களும் இலங்கை தேசிய கண் வங்கியின் சுகாதார ஊழியர் ஒருவரின் சேவை வழங்கப்படும் வகையில் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

Sisili Projects Consortium (Pvt) Ltd

# " LOCAL MANUFACTURER
# &
# SUPPLIER OF
# LOCALLY MANUFACTURED
# MEDICAL PRODUCTS "

Sisili

*sisili@sisiliprojects.com / www.sisiliprojects.com*

*Product Inquires/Feedback: 011 3090344*

# Historically Valuable Buildings



*Victoria Memorial Building - 1903*



*Dermatology Unit - Ward 13*



*Old Administration Building - 1903*



*Merchant's Ward - 1918*



*Bandaranayke Building - 1958*



*First Wards - 1910*



*First Out Patient Department - 1910*

Congratulations & Best Wishes

For the 150th Anniversary of the

National Hospital of Sri Lanka, Colombo 10

From

# NEVILLES

(Suppliers of Hospital Linen & Curtains)

No: 28/6, Kirula Place, Boralesgamuwa.

Telephone : 011 – 2 509 385





# How surgery was performed on Hon. Prime Minister S.W.R.D. Bandaranaike

On Friday, September 25, 1959, as the morning rays of sun were rising in the sky, a Buddhist monk had arrived at the Prime Minister's residence in Rosmead Place, Colombo to meet the Prime Minister. Only the monk knew why. Those days, the doors of the Prime Minister's residence remained open to all. It was the Prime Minister's habit to speak with any members of clergy first if they arrived.

Accordingly, the Prime Minister brought his hands together in customary fashion to pay his respects to this monk named Somarama Thera. However, instead of accepting the worship, the Thera hastily moved a couple of steps back and pulled out a pistol concealed within his saffron robes. Several bullets were released not even distinguishing the seconds that went by.

The Prime Minister's white clothes became stained with red. It was nearly 10.00am. Everyone including the Prime minister's wife - Madam Sirimavo rushed the Prime minister to the Colombo National Hospital. The Prime Minister's brother-in-law, Dr. Seewali Rathwatte rushed to Dr. P.R. Anthonis, who was a renowned surgeon at that time.

A distressed Dr. Seewali Rathwatte came to a halt at the doors of the surgical theatre where Dr. P.R. Anthonis was in.

"Sir, my brother has been shot"

"Which Rathwatte?"

"Not Rathwatte… It's the Prime Minister"

"Where is our Prime Minister?"

"Outside… in the car… "

Still in the garbs he was dressed in for the surgery, Dr. Anthonis ran outside. The Prime minister was in the left of the Cadillac's rear seat. His missus was beside him.

Slightly smiling despite the crisis, the Prime Minister said, I don't feel that bad. I just got hit by a few bullets.

Saying, 'Seems like sir is not that critical', Dr. Anthonis checked his pulse. However, from years of experience, he realized that rhythm of the pulse indicated quite the opposite and that the patient was indeed, in critical condition. Therefore, he rushed for a gurney to take away the Prime Minister.

"No Doctor… I can walk…" It was the voice of the Prime Minister.

The Prime Minister was laid upon the surgical table. A large crowd gathered around the theatre. However, everyone except those who were needed, were removed immediately. The doctor prepared for the surgery. The Prime Minister's wife too, was not allowed inside as it was an emotional moment.

"Sir, you are fine. But it is better if you do not speak," Dr. Anthonis advised, for the well-being of the patient.

Dr. Anthonis prepped the patient for surgery as follows. After the X-ray machine was brought in, JMO Dr. Fernando too, arrived. The Prime Minister was checked before being x-rayed.

The doctors seated the Prime Minister to obtain x-rays to ascertain whether there were bullets inside his body.

As the doctors said, "Prime Minister, the images are being taken from the back. Therefore, please hold your breath," the Prime minister laughed and jokingly said, "I have been shot from the front. Please do not shoot me from the back as well."

X-rays verified that there was a bullet within the body in the right side of the chest near the ninthrib. Even before the X-rays were taken, Dr. Anthonis had sent for Thoracic surgeon - Dr. T. D. H. Perera, should the chest condition be serious. Two more doctors were present to assist Dr. Anthonis.

The doctors commenced with anesthesia. Suddenly the Prime minister's pulse and breathing stopped. On the directions of Dr. Anthonis, an open heart massage was administered. Shortly, the Prime Minister was resuscitated and his breathing and pulse returned.

Dr. Anthonis saw that there was blood gathered in the Prime Minister's abdominal cavity. It was decided to speed up the surgery as doctors realized the Prime minister's condition was critical.

By 11.am, the surgery began. It was 4.15 when the surgery ended. Before commencing, Dr. Anthonis ordered the team to do their job to the dot and to be alert and responsible.

However, by 7.45am on Sep. 26, the life force of Premier Bandaranaike – who was referred to as the Silver Bell of Asia, left his body.

This incident remains as unforgettable memory in the 35 year long government service of Mr Ananda Dhanusekara.

Assassination of Mr S.W.R.D. Bandaranayake 25th September 1959 at Rosmead Place residence.

**Medical Team**

- Dr P.R. Anthonis
- Dr T.D.H. Perera

**Anaesthetists**

- Dr C. Umagaliya
- Dr S. Ponnambalam

**Others**

- Prof M.V.P. Peiris
- Dr Noel Bartholomeusz
- Dr L.D.C. Austin
- Dr Milroy Paul
- Dr C.J.L. Misso
- Dr J.H.F. Jayasooriya etc.

Dr Anthonis started to repair badly damaged liver, stomach, small & large bowel & Pancreas while Dr T.D.H. Perera was working on the region of chest. He removed a bullet and repaired the damage.

Suddenly, Anaesthetist announced that heartbeat has stopped. Then, Dr D.H. Perera opened the skin and open Heart message was given. 7 ½ points of blood transfusion given and the surgery lasted for 330 mimutes.

- He died at 7.45 a.m. on 26 – 09 – 1959



# එදා අගමැති බණ්ඩාරණායකට ශල්‍ය කර්මය කලේ මෙහෙමයි

1959 සැප්තැම්බර් 25 වැනිදා සිකුරාදා උදෑසන හිරු එළිය දෝර ගලා එමින් තිබුණි. කොළඹ හතේ පිහිටි රොස්මිඩ් පෙදෙසේ අගමැති නිවෙසට භික්ෂූන් වහන්සේ නමක් පැමිණ සිටියේ අගමැතිවරයා හමුවන අභිප්‍රායෙනි. හේතුව දන සිටියේ උන්වහන්සේ පමණකි. අගමැති මැදුරේ දොර එදා කා වෙනුවෙනුත් විවර වී තිබුණි. අගමැතිවරයාගේ සිරිත වූයේ තමන් මුණ ගැසෙන්නට පැමිණ සිටින්නවුන් අතරින් යතිවරයාණන් වහන්සේලා වෙත්නම් පළමුකොට උන්වහන්සේලා මුණගැසී උන්වහන්සේලා සමග කතාබහ කිරීමය.

ඒ සිරිත අනුව යමින් අගමැතිවරයා සෝමාරාම නම් හිමිනම ඉදිරියේ දොහොත එක් කළේ වැඳ නමස්කාර කරන්නටය. එහෙත් ඒ නමස්කාරය පිළිගනු වෙනුවට ක්ෂණයෙන් අඩියක් දෙකක් පිටුපසට ගිය හිමිනම කහ සිවුර අස්සෙන් ඇද එළියට ගත්තේ පිස්තෝලයකි. එක් නිමේෂයකදී පිස්තෝලයෙන් වෙඩිඋණ්ඩ කිහිපයක්ම නිකුත් වූයේ අනපේක්ෂිත ලෙසය.

සුදුවතින් සැරසී උන් අගමැති සිරුර ලෙයින් රත්පැහැ ගැන්විණි. වේලාව පෙරවරු 10 ට ආසන්නය. හැකි ඉක්මනින් අගමැතිවරයා කොළඹ මහ රෝහල වෙත ගෙනයන්නට සිරිමා මැතිනිය ප්‍රමුඛ සියල්ලෝ කටයුතු කළහ. දොස්තර සීවලී රත්වත්තේ නම් අගමැතිවරයාගේ මස්සිනා වහාම දුවගියේ ශල්‍ය වෛද්‍යවරයෙකු වූ පී.ආර්. ඇන්තනිස් දොස්තර මහත්තයා ළඟටය. ඔහු එවකට සිටි දක්ෂශල්‍ය වෛද්‍යවරයෙකු විය.

නොසන්සුන්ව සිටි දොස්තර සීවලී රත්වත්තේ නැවතුනේ ඇන්තනීස් දොස්තර මහතා රැඳී සිටි ශල්‍යාගාරයේ දොරටුව අබියසය.

සර්, මගේ සහෝදරයාට වෙඩි තියලා

කොයි රත්වත්තේට ද...?

රත්වත්තෙ නෙමෙයි අගමැතිතුමාට

කෝ, අපේ අගමැතිතුමා කොහේද...?

අන්න එළියේ කාර් එකේ ඉන්නවා....

ශල්‍යාගාරයේ දී ඇඳ සිටින ඇඳුම පිටින්ම දොස්තර ඇන්තනිස් මහතා එළියට දුව ගියේය. අගමැතිවරයා සිටියේ කැඩිලැක් මෝටර් රියේ පසුපස අසුනේ වම්කොණේය. මැතිනිය තම හිමිසඳ අසලය.

මට ඒ තරම් අමාරු නෑ. වෙඩි කිහිපයක් වැදුනා විතරයි. උතුමෝ නොසැලෙති කරදර අභිමුව කීවාක් මෙන් අගමැතිවරයා ඒ වදන් පැවසුවේ මද සිනාවක් දෙතොල් මත රඳවා ගෙනය.

සර්ට ඒ තරම් අමාරු නැති බව නම් පේනවා. දොස්තර ඇන්තනිස් මහතා සෙමින් පවසමින් අගමැතිවරයාගේ නාඩි අල්ලා බැලුවේය. එහෙත් රෝගියාගේ තත්ත්වය බරපතල බව ඒ නාඩි වැටෙන රිද්මයෙන් පළපුරුදු වෛද්‍යවරයා වහා තේරුම් ගත්තේය. ශල්‍යාගාරය වෙත අගමැතිවරයා ගෙන යන්නට ඔහු ගිලන ඇඳක් ගෙන් වීමට යුහුසුළු වූයේ එහෙයිනි.

නෑ, මට පයින් යන්න පුළුවන් දොස්තර මහත්තයා... ඒ අගමැතිවරයාගේ කටහඬය.

ශල්‍ය මේසය මත අගමැතිවරයා හාන්සි කරවනු ලැබුවේය. ශල්‍යාගාරය පුරා විශාල පිරිසක් රැස්වූහ. අත්‍යාවශ්‍ය පිරිස හැර සියල්ලන් ඉන් වහා ඉවත් කෙරිණි. දොස්තර මහතා සැත්කමට සූදානම් විය. අගමැති බිරියට ශල්‍යාගාරයට එන්නට ඉඩ නොදුන්නේ එය ඉතා හැඟීම් බර මොහොතක් වූ හෙයිනි.

සර්, ඔබට හොඳයි. ඔබ කතා නොකරනවා නම් වඩාත් හොඳයි... දොස්තර ඇන්තනීස් ඒ අවවාදය දුන්නේ තම රෝගියාගේ හිතසුව පිණිසය.

එදා ඇන්තනීස් මහතා ශල්‍ය කර්මයත් පූර්ව කටයුතුත් සිදු කළේ මෙසේය. එක්ස්රේ යන්ත්‍රය ගෙන ඒමෙන් පසුව අධිකරණ වෛද්‍ය නිළධාරී දොස්තර ප්‍රනාන්දු මහතා ද පැමිණියේය. එක්ස්රේ පින්තූරය ගැනීමට පෙර අගමැතිතුමා පරීක්ෂාවට ලක් කෙරුණි.

වෛද්‍යවරු අගමැතිවරයා වාඩිකර සූදානම් වූයේ ශරීර අභ්‍යන්තරයේ වෙඩි උන්ඩ ඇද්දැයි සැක හැර දැනගනු පිණිස එක්ස්රේ පින්තූර ගන්නටය.

අගමැතිතුමා පින්තූර ගන්න ඕනෑ පිටුපසින්. ඒ නිසා හුස්ම ඉහළට අල්ලාගෙන ඉන්න. අගමැතිවරයා සියල්ල මැද සිනාසුණේය. ඩොක්ටර් මට දුන් වෙඩි තියලා තියෙන්නේ ඉස්සරහින්. පිටිපස්සෙනුත් වෙඩි තියන්න නම් එපා. අගමැතිවරයා සියලු ව්‍යසන මැද විහිලුවක්ද කළේය.

එක්ස්රේ පින්තූරය කියාපෑවේ ශරීර අභ්‍යන්තරයේ වෙඩිඋණ්ඩයක් ඇති බවය. ඒ අනුව එය තිබුණේ පපුවේ දකුණු පැත්තේය. පපුවේ 9 වැනි ඉලඇටය ලඟ වෙඩි උන්ඩය ඇති බවට එක්ස්රේ පින්තූරය සාක්ෂි දැරුවේය. එක්ස්රේ පින්තූරය ගන්නටත් පෙර පපුවේ ශල්‍යකර්මය පිළිබඳ විශේෂඥයකු වූ දොස්තර වී. ඩී. එච්. පෙරේරා දොස්තර මහතා වෙත ඇන්තනීස් දොස්තර මහතා පණිවුඩයක් යවා තිබුණි. ඒ පපුවේ තත්ත්වය බරපතළ වේ නම් ඒ සඳහා තමාට එකී වෛද්‍යවරයාගේ

උපකාර ලබා ගැනීමටය. සැත්කම සඳහා ඇන්තනීස් දොස්තර මහතාගේ උපකාරයට තවත් සහායක දොස්තර මහත්වරු දෙදෙනෙක් පැමිණ සිටියහ.

අගමැතිවරයා නිර්වින්දනය කිරීම ඇරඹුණි. එහෙත් හිටිවනම අගමැතිවරයාගේ නාඩි නැවතී හුස්ම ගැනීම ද නැවතුනේය. දොස්තර ඇන්තනීස්ගේ උපදෙස් මත දොස්තර පෙරේරා මහතා විසින් වහාම හෘදය වස්තුව පිරිමදිනු ලැබුණි. හෘදය වස්තුව මදවේලාවක් පිරිමදිද්දී යළි නාඩි වැටීමත්, හුස්ම ගැනීම ආරම්භ වීමත් සිදුවිය.

උදර කුහරයේ ලේ එක් රැස්වී තිබෙනු ඇන්තනීස් දොස්තර මහතා දුටුවේය. සැත්කම ඉක්මන් කළයුතු බවට තීරණය කෙරුණි. මේ වෙද්දී අගමැතිවරයාගේ තත්ත්වය අවදානම් සහගත බව වෛද්‍යවරු තේරුම් ගෙන සිටියහ.

දහවල් 11.00 වෙද්දී මේ සියල්ල මධ්‍යයේ සැත්කම ඇරඹිණි. එය අවසන් වෙද්දී වේලාව සවස 4.15 ලෙස ඔරලෝසු මුහුණතේ වේලාව සටහන් වී තිබුණි. සැත්කම කරද්දී තම තමන්ගේ කාර්ය හරියටම කරන්න වගකීමෙන් යුතුව විමසිලිමත් වෙන්න. ඒ විධානය ඇන්තනීස් මහතා කළේ සැත්කම ආරම්භ කරන්නට පෙරාතුවය.

සැප්තැම්බර් 26 වැනිදා උදේ 7.45 පමණ වෙද්දි අසියාවේ රිදී සීනුව ලෙස සම්භාවනයට පත් අගමැති බණ්ඩාරණායකගේ ප්‍රාණය හිස් අවකාශයට මුසුවිය.

ආනන්ද ධනුසේකර මහතාගේ 35 වසරක රාජ්‍ය සේවයේ නොමැකෙන මතක සටහනක් ලෙස අගමැතිවරයා වෙනුවෙන් තමන් ඉටු කළ රාජකාරිය පිළිබඳ මේ මතක සමුච්චය රැඳී පවතී.

# முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கவிற்கு அறுவைச் சிகிச்சை இப்படித்தான் மேற்கொள்ளப்பட்டது

1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கதிரவனின் ஒளிக் கதிர்கள் வீசிக் கொண்டிருந்தன. கொழும்பு ஏழில் அமைந்துள்ள றொஸ்மீட் இடத்தில் பிரதமரின் வீட்டுக்கு பிரதமரைச் சந்திக்கும் நோக்குடன் ஒரு பிக்கு வருகை தந்திருந்தார்.

வருகைக்கான காரணத்தை அவர் மட்டுமே அறிந்திருந்தார். பிரதமர் மாளிகையின் கதவு அன்றைய தினம் சகலருக்குமாக திறந்திருந்து. தம்மைச் சந்திப்பதற்காக வருகின்றவர்களுக்கு மத்தியில் துறவிகள் இருக்கும் பட்சத்தில் அவர்களை முதன்முதலில் சந்தித்து உரையாற்றுவதை பிரதமர் வழக்கமாகக் கொண்டிருந்தார்

அந்த வழக்கத்திற்கமைவாக பிரதமர், சோமாராம எனப்படுகின்ற தேரரின் முன்னால் இரு கைகளையும் கூப்பியது அவரை வணக்குவதற்காகவேயாகும். ஆனால் அந்த வணக்கத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக நொடிப் பொழுதில் சில அடிகள் பின்னோக்கி நகர்ந்த தேரர் மஞ்சள் நிறக் காவி ஆடைக்குள் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றை வெளியில் எடுத்தார். ஓரிரு செக்கன்கள் கூட கடப்பதற்கு முன்னர் ரவைகள் துப்பாக்கியிலிருந்து பறந்து வந்தன.

வெண்ணிற ஆடைகளை அணிந்திருந்த பிரதமரின் உடல் குருதியினால் சிவப்பு நிறமாக மாறியது. நேரம் சுமார் காலை 10.00 மணி இருக்கும். முடிந்தளவு சீக்கிரமாக பிரதமரை கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு சிறிமாவோ அம்மையாரை உள்ளிட்ட ஏனையோர் நடவடிக்கை எடுத்தனர். டாக்டர் சீவலி ரத்வத்தே எனப்படும் பிரதமரின் மைத்துனர் அறுவைச் சிகிச்சை மருத்துவராகிய பீ. ஆர். அந்தனீஸ் அவர்களை நோக்கி விரைந்தார். அவர் அப்போதிருந்த ஒரு திறமையான அறுவைச் சிகிச்சை மருத்துவராவார்.

பதற்றத்துடன் காணப்பட்ட டாக்டர். சீவலி ரத்வத்தே, டாக்டர் அந்தனீஸ் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அறுவைச் சிகிச்சைக் கூடத்தின் கதவடியில் தனது பயணத்தை நிறுத்தினார்.

“ஐயா எனது சகோதரனை சுட்டுவிட்டார்கள்”

எந்த ரத்வத்தையை....?

“ரத்வத்தையை இல்லை பிரதமரை”

“எங்கே, எங்கள் பிரதமர் எங்கே இருக்கிறார்?

“அங்கே, வெளியிலுள்ள காரில் இருக்கிறார்....”

அறுவைச் சிகிச்சைக் கூடத்தில் அணிந்திருந்த ஆடையுடனேயே டாக்டர். அந்தனீஸ் அவர்கள் வெளியில் ஓடிச் சென்றார். பிரதமர் கெட்லொக் மோட்டார் வாகனத்தின் பின் ஆசனத்தின் இடது மூலையில் இருந்தார். அம்மையார் அவருக்கு அருகில் காணப்பட்டார்.

எனக்குப் பெரிய அளவு கஷ்டமில்லை. சில ரவைகள் பட்டுள்ளன அவ்வளவுதான். அவர் சலனமடையவில்லை. பிரதமர் அப்பதங்களை புன்சிரிப்பினை உதடுகளில் தக்க வைத்துக்கொண்டே குறிப்பிட்டார். ஐயாவிற்கு பெரியளவு கஷ்டம் இல்லையென்பது தெரிகின்றது. டாக்டர். அந்தனீஸ் மெதுவாகக் குறிப்பிட்டு பிரதமரின் நாடித் துடிப்பினைப் பரிசோதித்தார். ஆனாலும் நோயாளியின் நிலைமை பாரதூரமாக உள்ளதென்பது நாடித் துடிப்பின் விதத்தைக் கொண்டு அனுபவம் வாய்ந்த மருத்துவர் உடனடியாகப் புரிந்து கொண்டார். அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு பிரதமரைக் கொண்டு செல்வதற்காக நோயாளர் கட்டிலொன்றை வரவழைப்பதற்கு அவர் விரைந்து செயற்பட்டமைக்கான காரணம் அதுவாகும். வேண்டாம் எனக்கு நடந்து போக முடியும் டாக்டர் ஐயா... அது பிரதமரின் குரலாகும்.

அறுவைச் சிகிச்சை மேசையின் மீது பிரதமர் சாய வைக்கப்பட்டார். அறுவைச் சிகிச்சைக் கூடம் பூராக ஆட்கள் கூடினர். அத்தியாவசியமானவர்களைத் தவிர ஏனையோர் உடனடியாக அங்கிருந்து அகற்றப்பட்டனர். டாக்டர் அறுவைச் சிகிச்சைக்குத் தயாரானார். பிரதமரின் பாரியாருக்கு அறுவை சிகிச்சை கூடத்திற்குள் வருவதற்கு இடமளிக்கப்படாதமைக்கான காரணம் அது உணர்வுபூர்வமான சந்தர்ப்பமாக அமைந்திருந்தமையினாலாகும்.

ஐயா உங்களுக்கு இப்போ நல்லம். நீங்கள் பேசாமல் இருப்பது மிகவும் நல்லது என்ற அறிவுறுத்தலை டாக்டர் வழங்கியமைக்கான காரணம் தமது நோயாளியின் மனத் திருப்திக்காகவேயாகும்.

பிரதமர் அன்று வெடிபட்டு வைத்தியாசலைக்கு கொண்டுவரப்பட்ட வேளையில் நான் கொழும்பு

போதனா வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூடத்தில் இரசாயன தொழில்நுட்பவியலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். நான் மருத்துவ இரசாயன தொழில்நுட்பவியலாளராக பயிற்சி பெற்று 1955 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்டேன். அது கொழும்பு போதனா வைத்தியசாலையாகும்.

